
எல்லாம் வல்ல தெய்வமது
மன்னார்குடி பானுகுமார்

# அணிந்துரை

ஆழ்ந்த நோக்கு, கூர்ந்த அறிவு, உண்மையைத் தேடும் ஆற்றல், முன்னேற்றம் எல்லாம் "இறைத்தேடல்". இந்த இறைத்தேடல் மானுடத்தினை வாழவைக்கிறது.

அருள்நிதி எழுத்தாளர் "மன்னார்குடி பானுகுமார்" ஐயா அவர்களின் இந்த "எல்லாம் வல்ல தெய்வமது" என்ற - அற்புத வேதாத்திரிய திருமறை - "ஞானக் களஞ்சியம்" பாடலின் விளக்கம்.

பூரணப் பொருளைத் தேடி, தெரிந்து உணர்ந்து வளமோடு வாழ உகந்த ஓர் அற்புத படைப்பு.....கருவூலம்.

"ஆயிரம் இங்குண்டு ஜாதி" என்றார் கவி பாரதி. ஜாதி, மத, இன, மொழி பேதத்தில் "இறை" யை மறந்து "இரை" க்கு இரையாகி பிணியுற்று தேடுகிறான் இறையை. அலைகிறான். "எங்கே தேடுவேன்" எனப் புலம்புகிறான் மனிதன்.

பானுகுமார் ஐயா அவர்கள்- இந்த நூற்றாண்டு கண்ட மகான் குரு பிரான் வேதாத்திரி மகரிசி அவர்களின் பொக்கிஷத்தை-- எளிதாக அறியும் வண்ணம் "வான் கலந்த வேதாத்திரியே" என்னும் பாடலை நயம்பட வர்ணித்து கொடுத்துள்ளார்.

"அறிந்த அனைத்தையும் அறிவித்தோன் இல்லை
அறிந்த அனைத்தையும் அறிந்தோரும் இல்லை
அறிந்த பலரிடம் அறிந்ததும் அனுபவ அறிவும் இணைந்ததே
அறிவின் வளர்ச்சி"

எனும் அருட்தந்தையின் "பாடலுக்கே "எல்லாம் வல்ல தெய்வமது" என்ற பதினாறு வரிப்பாடலை-- பதினொரு கேள்விகளில் --எந்த ஒரு பாமரனும் எளிதில் உணரும் வண்ணம் அமைந்திருப்பது பானுகுமார் ஐயா அவர்களின் அறிவின் மேன்மையையும் ஆளுமைத் திறனையும் உணர்த்துகிறது.

எங்கும் நிறைந்திருக்கின்ற இறைத் தெளிவுப் பாடல் “அங்கிங்கெனாதபடி” ஏற்றதொரு ஒப்புவமையாகத் தந்திருப்பது அருமை. அருமை.

சிந்தனை விஞ்ஞானி “சிம்சன்” அவர்களின் “குளோரோபாம்” கண்டுபிடிப்பை விளக்கி, மெய் ஞானமும், விஞ்ஞானமும் இணைந்தால் எவ்வளவு நன்மை என உணர்த்தியுள்ளார் ஆசிரியர் பானுகுமார்.

எல்லாம் வல்லதும் எங்கும் நிறைந்ததும், நம் உடலில் இயக்கமும்- அறிவு செயல்பாடும்- செயல் உணர்வு- அவனே நான் - என்னுள் அவன்- எல்லாம் ஒரே இறை- அதுவே “சுத்தவெளி” என்பதாக முடித்துள்ளார்.

எனவே “சுத்தவெளியே “ இறை என உணர்த்தும் இப்பாடல் ஒரு சிறந்த இறை வணக்கம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்தப் பேருண்மையை உணர்ந்து உய்வோமாக.
வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.

இறைத்தேடலுடன்
பேராசிரியர் V.S. விஜயலெட்சுமி M.Sc.
ஸ்கை பேராசிரியர்
மறைமலைநகர், சென்னை.

# எல்லாம் வல்ல தெய்வமது

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

“வான்கலந்த வேதாத்திரியே - நின்பாடல்களை
நான்கலந்த பாடுங்கால் - நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து- பால்கலந்து -செழுங்கனித்தீஞ் சுவைகலந்து - என்
ஊன்கலந்து-உயிர்கலந்து உவட்டாமல்இனிப்பதுவே”

இறைவனை வழுத்தும் நூல்களில் -பக்தனின் ஆன்மீக அனுபவத்தைச் - சொற்களாகப் பிழிந்தெடுத்து, கசிந்துருகிப் பேசுபவை- உலகில் மிகமிகச்சில நூல்களே உள்ளன.




அவ்வாறு காணப்படும் சில நூல்களில்- ஒன்றென இடம்பெறும் சிறப்புபெற்றது, ஞானக்களஞ்சியம். வேதாத்திரி தந்த இலக்கியமே ஞானக்களஞ்சியம்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் அடங்கிய ஞானக்களஞ்சியத்தில் உள்ள ஒவ்வொரு பாடல்களுமே இத்தரணியைத் தட்டி எழுப்பும் ஆற்றல் கொண்டவை.

விவிலியம், குரான், பகவத்கீதை, சமண சமய நூல்கள், வேதாந்தம் போன்ற வேத நூல்களால்- எல்லோரும் புரிந்து கொள்ள முடியாத வாழ்வியலை, எம்மதத்தவரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு - ஞானக்களஞ்சியத்தின் பாடல்கள் மூலம்- மிகவும் எளிய முறையில் - மக்களுக்குப் போதித்தவர் வேதாத்திரி மகரிசி.

“எல்லாம் வல்ல தெய்வமது…” என்ற பதினாறு வரி பாடலில், வேதாத்தியார் என்ன சொல்லுகிறார்.

- தெய்வம் என்றால் என்ன?
- தெய்வத்தின் இயல்பு என்ன?

- அது எங்கும் வியாபித்திருப்பது எப்படி?
- தெய்வத்தைப் பற்றிய உண்மையை நீயே சுயமாய் சிந்திப்பது எவ்வாறு?
- நம் உடலிலும் இறைநிலை எப்படி ஊடுருவியிருக்கிறது?
- பிரபஞ்சம் எப்படி எவ்வாறு இயங்குகிறது?
- அணுவாற்றல் இயங்குவது எப்படி?
- மனிதனின் ஆற்றல் எவ்வளவு?
- அணுவின் கூட்டுதான் நீயா?
- அண்டமும் பிண்டமும் ஒன்றா?
- இறைநிலையை எப்பொழுதும் நினைத்தால் பெரியவனாக வாழமுடியுமா?

போன்ற பல்வேறு கேள்விகளுக்கு மிக மிக எளிமையாக விடை தருகிறார் மகரிசி.

அருட்தந்தை வேதாத்திரி மகரசி அவர்கள் கடவுள் நிலையை மிகத் தெளிவாக இறைவணக்கப் பாடலில் எடுத்துரைக்கின்றார்.

## தெய்வம் அல்லது இறைநிலை என்றால் என்ன?

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்னும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம் என்பது வேதாத்திரியக் கோட்பாடாகும்.

## வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம்

இறையுணர்வு பெற்றவர்கள் இதுவரையில் தெளிவாக மொழி வழியிலும், பயிற்சி வழியிலும் கொடுத்துள்ள உண்மை விளக்கம் என்னவென்றால்,’சுத்தவெளியாகிய இறைநிலையே முடிவான அருட்பேராற்றலான தெய்வமாகும்’ என்பதாகும்.

சுத்தவெளியானது (1) வற்றாயிருப்பு, (2)பேராற்றல், (3)பேரறிவு, (4)காலம் என்கின்ற நான்கு வளங்களை உடையதாக இருக்கிறது.

## வற்றாயிருப்பு

சுத்தவெளியாகிய பெருவெளியில் இருந்து அணு முதலாக அண்டங்கள் மற்றும் உயிரினங்கள் எவ்வளவு தோன்றினாலும் சுத்தவெளியோ, அதனுடைய ஆற்றலோ எந்த அளவிலும் குறைவுபடாது. இந்த உண்மையை விளக்குகின்ற வார்த்தைதான் வற்றாயிருப்பு ஆகும்

## பேராற்றல்

பலகோடி சூரியக் குடும்பங்களை உடைய இந்த பேரியக்க மண்டலத்தில் உலவுகின்ற அனைத்தையும் இதே சுத்தவெளிதான் தாங்கிக் கொண்டு இருக்கிறது. இதனால் சுத்தவெளியை பேராற்றல் என்று கூறுகிறோம்.

## பேரறிவு

எந்தப் பொருளிலும், எந்த இயக்கத்திலும் இதே சுத்தவெளிதான் ஊடுருவி நிறைந்து ஒழுங்காற்றலாக, செயல் புரிந்து வருகிறது.

இந்த ஒழுங்காற்றல்தான் அறிவு என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு தோற்றத்திலும்,உருவ அமைப்பு,குணங்கள் மற்றும் காலத்தால் காலம் என்ற அதிர்வால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் அனைத்தும் நிகழ்கின்றன. இதனால் சுத்தவெளியானது பேரறிவு என்று விளக்கப்படுகிறது.

## காலம்

சுத்தவெளியானது தன்னிறுக்க அழுத்தமாக உள்ளதால், அது தன்னைத்தானே விட்டுவிட்டு அழுத்தும்போது, அதுவே நுண்ணதிர்வாகச் செயல்புரிகிறது.

இந்த நுண்ணதிர்வு என்ற காலத்தின் நுண்ணிய அலகானது கண்சிமிட்டும் நேரம்போல மிகக் குறைவானதாகும்.

இந்த  அதிர்வு இறைநிலையில் அடங்கி இருப்பதனால் எல்லாப் பொருள்களுக்கும் தோற்றம், வளர்ச்சி, முடிவு என்ற செயல்கள் உண்டாகின்றன. இதனால் இறையாற்றலை காலம் என்று சொல்கிறோம்.

ஆகவே இறையாற்றல் என்ற பெருவெளி வற்றாயிருப்பாக இருக்கிறது. பேராற்றலாக இருக்கிறது. பேரறிவாக இருக்கிறது. அதுவே

காலமாகவும் இருக்கிறது.

## இறைநிலை என்ற தெய்வம்

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும்
வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இந்நான்கும் விண்முதல் ஐம்பூதங்கள்
வான்கோள்கள், உலகம், உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம்
வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே பரிணாமம்
வந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில்
வழுவாத செயல்விளைவு நீதியே கூர்தலறம் உண்மை,உண்மை" (ஞாக.1666)



மனிதனால் செய்ய முடியாததையெல்லாம் செய்யக்கூடிய மாபெரும் ஆற்றல் பிரபஞ்சத்தையே இயக்குகிறது. மனிதனிலிருந்தும் இயங்குகிறது.

ஒரு சிறு விந்துவில் ஒர் அணுவை சிசுவாக்கி, அது வளரும் வரை பனிக்குடம் ஏற்படுத்தி, மனிதனை உருவாக்கும் வரை- அண்டங்களையும் கோள்கைளையும் துல்லியமாக இயக்கி வரும் தெய்வம் என்ற சுத்தவெளியைத்தான் "எல்லாம் வல்ல தெய்வமது" என்றார் மகரிசி.

அந்த ஆற்றலை, சிந்தனைவாதிகள் இயற்கை என்றார்கள். விஞ்ஞானிகள் பிரபஞ்ச ஒருங்கிணைப்பு ஆற்றல் என்கிறார்கள். மெய்ஞானிகளாகிய தத்துவவாதிகள் தெய்வம் என்கிறார்கள்.

## எங்கும் உள்ளது நீக்கமற...

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,

ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்

தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல் ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது?
அது கருத்திற்கு இசைந்தது அதுவே.
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம் (திருவருள் 1)

மெய்ப்பொருள் என்ற கடவுள் எங்கிருக்கிறார் என்ற ஆறு கேள்விகளை நம்மிடமே வைக்கிறார் தாயுமானவர்.

1. **அங்கு எங்கு என்று சொல்ல முடியாதபடி, அண்டவெளி முழுவதும்- எங்கும் -நிறைந்து விளங்கும்- ஒளிமயமாகி. உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும்- நிறைவான ஒன்றாகி, தனது திருவருளாகிய- சக்தியோடு கூடி, எங்குமாய் -நிறைந்து நின்ற பொருள் எது?**
2. **தனது திருவருளாக விளங்கும் –ஆகாயத்தின்கண்-- அண்ட கோடிகள் --அனைத்தும் தங்குமாறு-- விரும்பி இடம் கொடுத்து, உயிருக்கு உயிராய் நின்று, அவ்வுயிர்களைத் தழைக்கச் செய்தது-- எது?**
3. **மனத்துக்கும் வாக்குக்கும் --தட்டுப்படாமல் நின்றது எது?**
4. **சமயகோடிகள் பலவும், “இது-- எங்கள் தெய்வம், இது-- எங்கள் தெய்வம்!” என்று --எவ்விடத்தும் தங்களுக்குள்-- தொடர்ந்து எதிர்வழக்கு ஆடும்படி-- செய்த பொருள் எது?**
5. **எல்லா இடங்களிலும் பேசப்படுவதும், எல்லாப் பொருள்களையும் --இயக்கும் அறிவாய் விளங்குவதும்,**

**உயிர்களுக்கு இன்பப் பேற்றினை வழங்குவதும்-- எல்லா காலத்திலும்-- நிலைத்து நிற்பதும், ஆகிய பொருள் எது?**

6. **மேலான --இரவுபகல் அற்ற-- எல்லையில் உள்ள பொருள் எது?**



இந்த ஆறு கேள்விகளுக்கும் -- தாயுமானவரே பதிலும் சொல்கிறார்.

எது?எது? எது? என்ற கேட்ட - அந்த அது - நம்முடைய கருத்திற்கு இசைந்த பொருளே.

அந்தப் பொருளையே-- கண்ணால் காணும் பொருள்கள் அனைத்துமாகவும், மௌனமே உருவமான வெளியாகவும்—

(வெட்டவெளியாகவும், சுத்தவெளியாகவும். அருள்வெளியாகவும், தூய ஒளியாகவும்) நினைத்து வணங்குதல் செய்வோம்.

வெளி என்றால் என்ன? விடையாக வருகிறார் வேதாத்திரி மகரிஷி.

“வற்றாயிருப்பு, பேராற்றல், பேறறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம்” என்கிறார்.

## சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்

தெய்வம் அல்லது இறைநிலைப் பற்றிய அறிவை பற்றி நீயே சிந்தித்து தெளிய வேண்டும். எப்படி?




ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளால் மக்களிடையே சிந்தனையை விதைத்தவர் சாக்கரட்டீஸ். இந்த சிந்தனையை பாமரனிடமும்

மலர வைத்தவர் வேதாத்திரி  மகரிசி.

"சிந்தனைதான்" ஏன் எதற்கு எப்படி என்ற வினாவை எழுப்பி அறிவைப் பயன்படுத்தச் செய்யும்.

சிந்தனை இல்லா விட்டால் உலகத்தில் இயங்குகின்ற சக்தியே இருக்காது. சிந்தனையின் மூலமே முன்னேற்றம் காண முடியும்.

நாம் அனுபவிக்கும் இன்பங்கள் எல்லாம் மனிதர்களின் சிந்தனையிலிருந்து பிறந்ததுதான். அவர்களுடைய சிந்தனையே செயலாக மாறி கண்டு பிடிப்புகளாகத் தோன்றின.

நாம் யாராக இருந்தாலும் எந்தத் தொழிலைச் செய்பவர்களாக இருந்தாலும் சிந்தனையை உயர்வாகக் கொண்டிருக்க வேண்டும்.

சிந்தித்துச் செயல்படுவதின் மூலமே சிறப்பாக வாழ முடியும். நம்முடைய சிந்தனை ஆக்கப் பூர்வமான அறிவு நிரம்பியதாக இருந்தால் அனைவருக்கும் பயன்படும்.

சிந்தனையில் தெளிவு இருந்தால் நமக்கு வரும் சோதனையைக்கூட சாதனையாக மாற்றி விட முடியும். நாம் நினைத்தால் மனதில் நல்ல சிந்தனையை மட்டுமே வளர்த்துக் கொள்ள முடியும்.

இன்ப வாழ்க்கை வாழ வேண்டும் என்றால் சிந்தனை எவ்வளவு அவசியமாக தேவையோ, அவ்வளவுக்குச் செயலாற்றலும் தேவை என்கிறார் அறிஞர் ஹாஸ்லிட்.

இது இவர் கண்ட முடிவு மட்டுமே அல்ல! உலகத்தின் முடிவும் இதுதான்.




சிந்தனையும் செயலும் இணைந்து இயங்குகின்ற போதுதான் நாம் மேற்கொண்ட செயலில் வெற்றி பெற முடியும்.

குளோரோபாமைக் கண்டுபிடித்தவர் சிம்சன். இவர் மனிதர்கள் படும்

நோயின் வேதனையைக் கண்டு கண் கலங்கினார்.

அவருடைய காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றால் முதலில் உயில் எழுதி வைத்து விட வேண்டும்.

உயிருக்கு உத்திரவாதமற்ற சிகிச்சையாகக் கருதப்பட்டது அறுவை சிகிச்சை. இதனை மாற்றி அமைக்க வேண்டும் என்று சிம்சன் சிந்தனைச் செய்தார்.

பலவிதமான ஆராய்ச்சியில் மூழ்கினார். அறுவை சிகிச்சையின் போது வலி தெரியாமல் இருக்கும் வழியை கண்டுபிடித்தே ஆகவேண்டும் என்ற ஒரே முடிவை எடுத்து தீவிரமாக சிந்தனையில் ஆழ்ந்தார்.

நாட்கள் ஓடின. வருடங்கள் கடந்தன. தன்னுடைய சிந்தனையின் மூலமே ஆராய்ச்சியை விடாமல் செய்தார். அதன் பயன் அறுவை சிகிச்சை செய்து கொண்ட எவரும் உயிர் வாழ முடியும்.


அறுவையின் போது கூட வலி இல்லாமல் இருக்க இயலும் என்று நிரூபித்துக் காட்டினார். இந்த கண்டுபிடிப்புக்குக் காரணம் அவருடைய ஒரே சிந்தனைதான்.

ஒரு இலட்சியத்தை சிந்தனையிலே முளைக்க வைத்து விட்டு நன்றாக வேர் விட்டு வளரும் வகையில் அதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாலே போதும். அது தானாகவே வெற்றி பெற்று விடும்.

ஆம்.,அன்பர்களே..,

சிந்தனையில் தொடர்ந்து ஈடுபடும் போது நம்முடைய அறிவு நாளுக்கு நாள் பெருகும்.

சிந்தனையே ஆழமான அறிவுக்கு வித்தாக அமையும்.



அந்த அறிவின் தன்மை வாழ்க்கையை வளமுடன் வாழ வழி காட்டும்.

எனவே, அது என்ற சுத்தவெளி அங்கு, இங்கு என்று இல்லாமல் எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களிலும், எல்லா

இயக்கங்களிலும், எல்லா விளைவுகளிலும் குறைவில்லாமல் நீக்கமற நிறைந்துள்ளது என்று நமது முன்னோர்கள் சொல்லியுள்ளதைக் கேட்டு, அதையே மற்றவர்களுக்கும், பிற்காலத்தவர்களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அவ்வாறு சொல்லுவதற்குக் காரணமாயிருக்கும் அறிவை சிந்தனை மூலமாக உணர்ந்து தெளிவடைய வேண்டும். சிந்தனையானது மன அமைதியிலும், ஓர்மையிலும்தான் வரும்.

“புத்தம் புது சிந்தனையில் பூமியெல்லாம் நனையட்டும்

புனித வேதாத்திரியம் புவியெங்கும் பரவட்டும்!”

## கல்லார் கற்றார் செயல்விளைவாய்க்

## காணும் இன்ப துன்பமவன்..

வலுவான நம் உடலை இயக்குவதும், உயிராக இயங்குவதும், அறிவாக உணர்வதும் அதே தெய்வம் என்ற சுத்தவெளியில்தான் என்பதை உணரலாம்.

இயக்குவது அறிவு, இயங்குவது உயிர், உணர்வது மனம். இவையெல்லாம் எல்லைகட்டிய உடலுக்குள் இருப்பவை.

இவற்றையெல்லாம் கற்றவர்களாயிருந்தாலும், கற்காதவர்களாக இருந்தாலும், அவர்களின் செயல்பாடுகளில் மலரும் விளைவு இன்பம் அல்லது துன்பம் என்பது தெய்வ நீதியாகும்.

மனிதன் தன்னை மாற்றிக் கொள்கிற பக்குவத்தின் அடையாளமே ஆறாவது அறிவு.
தன்னைத்தானே மாற்றிக் கொள்கிற அதிகாரத்தை மனிதனில் அமைத்தது சுத்தவெளியின் பேரறிவுதான்.

அமைத்த அதிகாரத்தை சுத்தவெளியின் பேரறிவு ஒரு போதும் அகற்றாது.

ஆனால், தனக்குள் அமைந்துள்ள ஏதேச்சை அதிகாரத்தை, ஒருவர் தவறாகப் பயன்படுத்தினால், அதற்கான துன்ப விளைவை அவர் எதிர்கொள்ள வேண்டும்.

"முறையாக"ப் பயன்படுத்தினால் அதற்கான இன்ப விளைவை அவர் சந்திப்பார்.

அவரவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துகிற முறையைப் பொறுத்து மனிதன் உயர்வு பெறலாம் அல்லது வீழ்ச்சியுறலாம்.

## வல்லாய் உடலில் இயக்கமவன்

எந்த கட்டுப்பாட்டுக்கும் விதிக்கும் கட்டுப்படாத, தனக்கென ஒரு பாதையை வழியை வகுக்க வல்லவன் மனிதன்.

- புத்தராகவும் உயர்வான். அணுகுண்டையும் வீசுவான்.
- இயேசுவாகவும் உயர்வான். யூதாஸாகவும் வீழ்வான்.
- தாயுமானவராகவும் உயர்வான். அவரைத் தீயிட்டு கொளுத்தும் துன்பச் செயலையும் செய்வான்.
- வள்ளலாராகவும் உயர்வான். வள்ளலாரின் பேச்சைக் கேட்காதவனாகவும் மாறுவான்.
- அன்னை தெரசாவாக வாழ்ந்து அனைவரையும் நேசிப்பவரும் உண்டு. ஹிட்லராக அனைவரையும் வதைப்பவரும் உண்டு.

அனைவரும் மனிதர்கள்தான்!. ஆனால் எத்தனை வித்தியாசம்! இந்த வித்தியாசம் ஏன்? விடையாக வருகிறது வேதாத்திரியப் பாடல்

"கருவமைப்பு, உணவு வகை, காலம், தேசம்,
கல்வி, தொழில், அரசாங்கம், கலை , முயற்சி,
பருவம், நட்பு, சந்தர்ப்பம், பல ஆராய்ச்சி,
பழக்கம், வழக்கம், ஒழுக்கம் இவற்றிற்கேற்ப
உருவமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி

உடல்வலிவு, சுகம், செல்வம், மனிதர்கட்கு
வரும் வகையும் அவற்றின்தரம் அளவுக்கேற்ப
வாழ்க்கைநிலை பேதமுடன் தோன்றக் கண்டேன்” (ஞாக.838)

நாம் மாறமுடியும்! எப்போது? மகரிசியின் பாடல்களை உணர்ந்து வேதாத்திரியத்தைப் பின்பற்றினால்.

## அவனில்தான்நீ, உன்னில் அவன்-அவன் யார்? நீயார்? பிரிவேது?

பிரபஞ்சம் முழுவதும் இருப்பாக உள்ள தெய்வம் என்ற சுத்தவெளி, தன் ஆற்றலால் இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற இயல்பூக்கமாகிய அறிவால் அணுக்களாகி அவைகள் கூடிய கொத்தியக்கம்தான் சடப் பொருள்களாகவும் ஜீவன்களுமாகத் தன்நிலையில் மாற்றம் பெற்றுள்ளது.



எனவே, உனக்குள்ளாக தெய்வமும், தெய்வத்திற்குள்ளாக நீயும் இருப்பதை உணரும்போது, தெய்வமும் நீயும் பிரிவற்ற நிலையில் ஒன்றாகிவிட முடியும்.

தெய்வம் என்ற சுத்தவெளியை மனிதனைப் போன்று சிறு உருவத்தில் சித்தரித்து திருமணம் செய்து, திருவிழாக்கள் நடத்தி வழிபடுவது மனிதனின் அதீதமான கற்பனைகளின் உச்சக்கட்டம்.

இந்த கற்பனைகள் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வந்தன. இந்த கற்பனைக் கதைகளுக்கு அப்பாற்பட்டது தான் வேதாத்திரியம்.

"அவன் யார்? நீயார்? பிரிவேது"

என்றும்

"அவனின் இயக்கம் அணுவாற்றல்,

அணுவின் கூட்டுப் பக்குவம் நீ"

என்ற வரிகள் வாயிலாகவும்,


பழுத்த நிலை வரும் வரையில் நீ, நான் என்போம்

பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்"

என்ற வரிகள் வாயிலாகவும் அணுமுதல் அனைத்தும் சுத்தவெளியின் நிலைகள் என்பதையும் உணரலாம்.

## அவனை மறந்தால்நீ சிறியோன்

## அவனை அறிந்தால்நீ பெரியோன்



தெய்வநிலை நீ மறந்தபோது, மனிதன் என்ற சிறிய நிலையை எல்லைக்கட்டிக் கொண்டு அடைகிறாய். தெய்வத்தோடு இணைந்திருக்கும்போது நீயும் அதே நிலையை அடைவதால் பெரியோன் ஆகிறாய்.

சிற்றறிவைப் பேரறிவோடு இணைக்கும்

போது எல்லாப் பொருட்களிலும் தன்னையும் தன்னில் எல்லாப் பொருட்களையும் உணரலாம். புரிந்து கொள்ளலாம்.

அந்த நிலை எய்தப் பெற்றால், அதுவே முக்தி. மோட்சம், முழுமைப்பேறு ஆகும். இதுவே மனிதப் பிறவியின் நோக்கமும் உரிமையும் ஆகும்.

**“ஏன் சுத்தவெளி பிரபஞ்சமாக மாறியது?” என அன்பர்கள் பேராசிரியரிடம் கேட்க……**

**“ இந்த கேள்வியைத்தான் நான் உங்களிடம் எதிர்பார்த்தேன். உங்கள் சிந்தனை மிக உயர்ந்துவிட்டது. பாராட்டுக்கள்!**

**சுத்தவெளிதான் அனைத்துமாக மாறியது என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டு விட்டீர்கள்.**

**சுத்தவெளி ஏன், எப்படி அனைத்துமாக மாறியது என்பதை எளிமையாக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் மகரிஷி அவர்கள் தந்துள்ளார்கள்.**

**அதைப் பற்றி பேசுவதற்கு முன்னால் மகரிஷி அவர்களின் இறைவணக்கப் பாடல் ஒன்று சொல்லுங்கள் “ என பேராசிரியர் கேட்கிறார்கள்.**

**பல அன்பர்கள் ஒன்று சேர்ந்து**

**“எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்**

**வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவும் அவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.**

**அவனின் இயக்கம் அணுவாற்றல்**

அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான் நீ உன்னில்அவன்
அவன் யார்? நீயார்? பிரிவேது?

அவனை மறந்தால் நீ சிறியோன்
அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்
அறிவு முழுமை அது முக்தி. "

பாடலைப் பாடுகின்றார்கள்.

" மிக எளிமையான இந்தப் பாடலின் ஒவ்வொரு வரியினையும், இவ்வளவு நேரம் நாம் பேசியதையும் இணைத்து சிந்தித்துப் பாருங்கள்." என பேராசிரியர் சொல்ல

" தெய்வம் அதுவா அல்லது அவனா? " என கேட்கிறார் ஒரு அன்பர்.



" இறைவன் என்ற சொல்லையும் ஆண்பாலில் அவனைப் பெரும்பாலும் அழைக்கப் பழகிவிட்டதால் இந்த குழப்பம் ஏற்படுகின்றது. நாம்தான் சுயமாய் சிந்திக்கக் கற்றுத் தெளிந்து விட்டோமே! இறைவன், தெய்வம் என்ற சொற்களெல்லாம் இனி எங்கும் நிறைந்துள்ள இறைநிலை என்பதையே குறிக்கும். வேறு சந்தேகம் இருக்கின்றதா?" என பேராசிரியர் கேட்கிறார்கள்.

" அவனின் இயக்கம் அணுவாற்றல் - இந்த வரிகளைப் பற்றி விளக்கிச் சொல்லுங்கள் " என அன்பர்கள் கேட்கிறார்கள்.




" சுத்தவெளிக்கு பேராற்றலும், பேரறிவும் உள்ளது என்பதை உணர்ந்தோம். அந்த சுத்தவெளிதான்

**தன்னைத்தானே இறுக்கிக்கொண்டு துகள்களாக,பரமாணுக்களாக மாறுகிறது என்பதையும் தெரிந்துகொண்டோம்.**

**சுத்தவெளியின் தன்மைகளான பேராற்றலும், பேரறிவும் பரமாணுக்களுக்கு இருக்கும்தானே!**

**மேலும் பரமாணுக்களின் கூட்டுதான் பஞ்சபூதங்களும், ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொண்டோம்.**

**இப்போது இந்த வரிகள் புரிந்திருக்கும் என நினைக்கின்றேன்" என பேராசிரியர் சொல்ல. . . . . . . .**

**" நான் அவன்தான். அவன் நான்தான். எல்லாம் சுத்தவெளிதான்." - என அன்பர்கள் பதில் சொல்கின்றனர்.**

**" சரி, சுத்தவெளிக்கு அதாவது இறைநிலைக்கு உடல் உண்டா, குடல் உண்டா?"**

**" சுத்தவெளியின் மிக, மிக, மிக சின்னத் தோற்றமான நமக்குத்தான், ஜீவராசிகளுக்குத்தான் உடலும், குடலும் உண்டு.
இறைநிலைக்குக் கிடையாது."**

**" நன்று. இறைநிலைக்கு விருப்பு, வெறுப்பு உண்டா?"**

**" கிடையாது."**

**" இறைநிலைக்கு இன்பம், துன்பம் உண்டா?"**

**" இல்லை"**

**" இறைநிலைக்குத் தேவைகள் உண்டா?"**

**" கிடையவே கிடையாது"**

**" இப்போது சொல்லுங்கள் - எல்லா அண்டங்களையும் ஓர் ஒழுங்காற்றலுடன் இயக்கி காத்துவரும் எல்லையற்ற இறைநிலைக்கு, நாம் எதைக் கொடுக்க முடியும்? எப்படி கொடுக்க முடியும்?" – பேராசிரியர் கேட்கிறார்கள்.**

**அன்பர்கள் சிந்திக்கின்றனர்.**

**“ கோவில்களில் உள்ள சிலைகளில் கடவுளைக் கண்டு காணிக்கைகள் செலுத்தும் நாம், கஷ்டப்படும் மனிதர்களிடம் உறையும் இறைநிலையைக் காண மறந்து விடுகின்றோமே!**

**நன்கு சிந்தியுங்கள் அன்பர்களே! இப்போது சுத்தவெளி ஏன், எப்படி எல்லாமாக மாறியது பற்றிப் பார்க்கலாம்.”**

ஆதியெனும் பரம்பொருள்மெய் எழுச்சிபெற்று,
  அணுவென்ற உயிராகி அணுக்கள்கூடி,
மோதியிணைந்து இயங்குகின்ற நிலைமைக்கு ஏற்ப,
  மூலகங்கள் பலவாகி அவையிணைந்து,
பேதித்த அண்ட கோடிகளாய் மற்றும்
  பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி,
நீதிநெறி உணர் மாந்தராகி , வாழும்
  நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம். (ஞாக.1)

ஆஹா! **“எல்லாம் வல்ல தெய்வம்” என்ற பாடலில் இவ்வளவு புதையல்களா?** ஆம்! **அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் ஒவ்வொரு பாடல்களுமே புதையல்கள்தான். பொக்கிஷங்கள்தான்.**

**இப்பாடல்களை நாள்தோறும் படித்து இன்புற்று ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.**

## துணைநின்ற நூல்கள்


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி
2. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர், அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
3. தாயுமானவர் பாடல்கள், தாயுமானவர்
4. Vethathiriam banukumar - youtube speeches by mannargudi Banukumar.
5. இணையதள தகவல்கள்